# இணையருக்கு வாழ்த்து!



## கிருத்திகா–அரவிந்த் குமார்

போகும் வழியிலெல்லாம் புத்துணர்வு கூட்டி சிலர்
வந்தனம் கூறி வாழ்த்தி மகிழ்வதுண்டு!
வேகும் கோடையிலே வெந்தணலில் நிழலாகும்,
வேங்கை மரமெனவாய் விளையும் பேச்சிருக்கும்!
ஆகிநடந்து வந்த ஆன்ற கனவுகளில் மகிழ்ந்து,
அன்பை சிலரே அளித்து மகிழ்ந்திடுவார்!
முகிழ்ந்திடும் சிரிப்பில் அணைக்கும் நண்பர்,
முகப்பேர் முகவரியாம் மதுரை பிறந்த,

சீலன் **இராஜகுமார் - மகேஸ்வரி** ஈன்ற மகளாம்,
**கிருத்திகா** தன்னைக் கைத்தலம் பற்றிய,
வேலன் பெயர்சூடிய **கணேஷ்பாபு - மஞ்சுளா** ஈன்ற,
மகனார் **அரவிந்த் குமார்** தாமும் இணையுடன்
கோலமிகு சீர்கள் கொண்டாடியே தாம்பெற்று,
குறைவின்றி வாழ்கவென்று வாழ்த்துவேனே!
ஆலமாய் தழைத்திருந்து, ஆன்ற அறங்கள் காத்து,
அன்புடன் நிறைந்துவாழ வாழ்த்தி நிறைவேன்!

அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
மேனாள் மதிப்பீட்டு அதிகாரி,
சுங்க இல்லம், சென்னை.
31-10-2025